**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2023**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 16 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாச்சிமுத்து | ஜாதி | : | |
| த.பெ | : | முத்துக்கவுண்டர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 69/2026 |
| தேதி | : | 16.02.2026 | | | |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை**

உங்கள் மனைவி பெயர் பாப்பாத்தி என்றால் சரிதான். உங்கள் மனைவி திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.129/2023 என்ற வழக்கை இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி தீர்த்தம் என்பவர் பெயரில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கும் புரோ நோட்டு வழக்கு தான் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் புரோ நோட்டை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு எழுத தெரியாது. அவர்கள் தான் எழுதி கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். உங்களிடம் காட்டப்படும் புரோ நோட்டில் மேலே உள்ள கையொப்பம் யாருடையது என்றால் ஆனந்த குமாருடையது. அவர் தான் கொண்டு வந்தார்.

மேற்சொன்ன புரோநோட்டில் தவமணி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. அவர் தான் கொண்டு வந்து கொடுத்தார். அவரை வைத்து தான் பணம் கொடுத்தேன். வக்காலத்தில் உள்ள ஆனந்தகுமாரின் கையெழுத்தும், புரோநோட்டில் உள்ள ஆனந்தகுமாரின் கையெழுத்தும் வேறு வேறாக உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. கணவன், மனைவி இரண்டு பேரும் தான் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிரதிவாதிகள் உங்களிடம் எப்போது கடன் கேட்டார்கள் என்று உங்கள் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என்ன தேவைக்காக உங்களிடம் பிரதிவாதிகள் கடன் கேட்டார்கள் என்றால் குடும்ப தேவைக்காகவும், அவசர தேவைக்காகவும் கடன் கேட்டார்கள். புரோநோட்டில் உள்ள வாசகமும், வழக்கு பிராதில் உள்ள வாசகமும் வேறு வேறாக உள்ளது என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதிகள் உங்களிடம் பணம் பெற்றார்கள் என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. நீங்கள் மல்லையாபுரம் சக்திவேல், அக்கரைப்பட்டி சுகன்யா, அக்கரைப்பட்டி தவமணி ஆகியோருக்கு வட்டிக்கு கடன் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஏற்கனவே கொடுத்திருந்தேன், வாங்கிவிட்டேன்.

நீங்களும், உங்கள் மனைவியும், சாட்சி கையொப்பம் செய்துள்ள வள்ளியம்மாளும் சட்டத்திற்கு புறம்பாக வட்டி தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கில் சொல்லியுள்ள மாதிரி எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், அவர்கள் அதற்கு ஆதரவாக எந்த கடனுறுதி சீட்டும் உங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி உங்களிடம் கைமாத்துக்காக ரூ.3000/- வழங்கியதற்காக நீங்கள் கையெழுத்து பெற்று புரோநோட்டை வாங்கிக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வாங்கிய கடனை 1ம் பிரதிவாதி உங்களிடம் கொடுத்துவிட்டு புரோநோட்டை கேட்கும்போது தான் நீங்கள் சண்டை போட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த புரோநோட்டிற்கும் பாக்கி தொகைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதிகள் உங்களுடைய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிகளிடம் பணம் பறிப்பதற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டட வழக்கு என்றால் சரியல்ல. எனவே நீங்கள் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor